திடலில் நடக்கின்றன. எனவே, போதிய இட வசதியுள்ள அந்தப் பள்ளியில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. லிங்கமுத்து, கட்டடம் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். நீங்கள் மற்ற கேள்விகளுக்குச் சென்றால், அவற்றிற்குரிய பதில்கள் அமைச்சரிடம் இருக்க வேண்டும் அல்லவா?* Please sit down.

திரு. கு. லிங்கமுத்து: *நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

கட்டட வசதி

***6232—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவுண்டம்பாளையம் தொகுதி, விளாங்குறிச்சி கிராமம், சேரன்மாநகர், போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, போக்குவரத்துக் கழகங்களின் வருவாயினை உயர்த்தவும், தரமான சேவைகள் வழங்கவும் ஆணையிட்டு, அதன்படி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், கோயம்புத்தூர், கவுண்டம்பாளையம் தொகுதி, விளாங்குறிச்சி கிராமம், சேரன்மாநகரில் அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் அடுக்குமாடி வணிக வளாகத்துடன் கூடிய பணிமனை வளாகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2012 ஜனவரி 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அ.இ.அ.தி.மு.கழகத்தினுடைய பொதுச் செயலாளர், கழகத்தின் காவல் தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, நான் இந்த முதல் கேள்வியை கேட்க அனுமதித்ததுடன், அந்தக் கேள்வியிலும் சரியான பதிலைச் சொல்லி, எங்களுடைய தொகுதி மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியைச் சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

மீன் பதனிடும் நிலையம்

***3236—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு மீன் வளத் அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதியில் மீன் பதனிடும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்மிடிப்பூண்டி தொகுதியில் மீன் பதனிடும் நிலையம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.